**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் தேதி திங்கட்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.173/2020**

(CNR No. TNPB02-000596-2020)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
அரும்பாவூர் காவல் நிலையம்,
குற்ற எண்.238/2018. ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

1. பதியன் என்ற முருகேசன், வயது 42/2018,
த/பெ.அங்கமுத்து,
அம்பேத்கார் தெரு, உடும்பியம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

2. பக்கன் என்ற முருகேசன், வயது 42/2018
த/பெ.அங்கமுத்து,
அம்பேத்கார் தெரு, உடும்பியம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

3. முருகேசன், வயது 43/2018
த/பெ.தொப்புளன்,
அம்பேத்கார் தெரு, உடும்பியம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

4. ரவிச்சந்திரன், வயது 28/2018(Split up in CC 72/2024)
த/பெ.தேவேந்திரன்,
அரும்பாவூர்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

5. மகேந்திரன், வயது 32/2018
த/பெ.பெரியசாமி,
அம்பேத்கார் தெரு, தழுத்தலை,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:20 +0530

6. கஸ்தூரி, வயது 50/2018(Split up in CC 72/2024)
க/பெ.சாமிநாதன்,
அரும்பாவூர்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரிகள்

(20.08.2024 தேதியிட்டு Crl.M.P.No. 1325 of 2024 ன் கீழ் இடப்பட்ட உத்தரவின் அடிப்படையில் இவ்வழக்கிலிருந்து 4, 6 எதிரிகள் மட்டும் பிரித்து எடுக்கப்பட்டு CC 72/2024 வழக்காக நடத்தப்பட்டு வருகிறது).

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="3">1.</td><td rowspan="3">குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம்</td><td colspan="2">(1, 2 எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மற்ற எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப் படவில்லை)</td></tr>
<tr><td>காவலில் வைக்கப்பட்ட தேதி</td><td>விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி</td></tr>
<tr><td>A1 –04.12.2018<br>A2 –02.12.2018<br>A3 –<br>A5 –</td><td>15.03.2023<br>06.12.2018<br>14.12.2018(AB)<br>26.12.2018(AB)</td></tr>
<tr><td>2.</td><td>நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி</td><td colspan="2">30.01.2020</td></tr>
<tr><td>3.</td><td>அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td>4.</td><td>குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி</td><td colspan="2">240 Crpc on<br>நாள் :19.01.2026</td></tr>
<tr><td>5.</td><td>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட)</td><td colspan="2">1.Crl.M.P.No. 3913 of 2022 Dt :04.07.2022<br>Crl.M.P.No. 2457 of 2022 Dt : 13.05.2022.<br>M.P.No. 01 of 2024 Dt : 19.03.2024<br>M.P.No. 07 of 2024 Dt : 01.10.2024<br>M.P.No. 08 of 2025 Dt : 05.04.2025<br>M.P.No. 14 of 2025 Dt : 23.06.2025<br>M.P.No. 21 of 2025 Dt : 08.10.2025<br>Surrender petition–Accepted.</td></tr>
</table>



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:26 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | 2.Crl.M.P.No. 2932 of 2018 Dt : 10.12.2018<br>Crl.M.P.No. 2972 of 2018 Dt : 06.12.2018 – U/s.437 Cr.P.C.–Allowed<br>3. Crl.M.P.No. 2458 /2022 Dt : 13.05.2022<br>Crl.M.P.No. 3914 /2022 Dt : 04.07.2022<br>M.P.No. 02 /2024 Dt : 19.03.2024<br>M.P.No. 05 /2024 Dt : 01.10.2024<br>Crl.M.P.No. 10 /2025 Dt : 05.04.2025<br>Crl.M.P.No. 15 /2025 Dt :23.06.2025– U/s.70(2) Cr.P.C–Allowed<br><br>4. Crl.M.P.No. 2456/ 2022 Dt : 13.05.2022<br>M.P.No. 06 /2024 Dt : 01.10.2024<br>M.P.No. 13 /2025 Dt : 23.06.2025<br>Crl.M.P.No. 23 /2025 Dt :08.10.2025– Advance hearing petition–Allowed<br><br>5. M.P.No. 22 of 2025 Dt : 08.10.2025 – U/s.72(2) BNSS.–Allowed<br><br>6. Crl.M.P.No. 1325 of 2024<br>Dt : 20.08.2024 – U/s.317(2) Cr.P.C. –Allowed<br><br>7. M.P.No. 25 of 2026 Dt : 11.03.2026– U/s.348 BNSS.–Allowed<br><br>8. Crl.M.P.No. 349 of 2026 Dt : 11.03.2026 – U/s.320 Cr.P.C.–Dismissed | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3 | 11.03.2026<br>11.03.2026<br>11.03.2026 | இல்லை<br>இல்லை<br>11.03.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 16.03.2026 | | |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை. | | |

RESHMA
Judicial Magistrate,
Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:32 +0530

| | | |
|---|---|---|
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை |

இவ்வழக்கானது 04.09.2020 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 16.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு.சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 3 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.முத்தமிழ்செல்வன் அவர்கள் முன்னிலையாகியும், 5 ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

<u>**தீர்ப்புரை**</u>

<u>**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**</u>

1. கடந்த 30.11.2018 ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் உடும்பியத்தில் உள்ள வாதியின் வீட்டில் வாதி இருந்தபோது எதிரிகள் அனைவரும் வாதியின் வீட்டிற்குள் குற்றமுறு எண்ணத்துடன் அத்துமீறி நுழைந்து எங்கடி உன் புருசனும் மூர்த்தியும் என்று கேட்டுள்ளார்கள் என்றும் வாதி தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே தேவிடியா உன் புருசன் எங்கடி என்று அசிங்கமாகத்திட்டிக்கொண்டே 1, 2, 3, எதிரிகள் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் வாதியை அடித்தும் 4, 5 எதிரிகள் வாதியின் தலைமுடியை பிடித்து இழுத்து கைகளால் உடம்பிலும் முகத்திலும் அடித்தும், 6 ம் எதிரி எப்படி தேவிடியா முருகேசன் மேல உன் புருசன் கேஸ் கொடுப்பான் என்று கேட்டு கையால் வாதியின் கன்னத்திலும் முதுகிலும் அடித்தும் வாதிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அப்போது வீட்டிற்கு வந்த வாதியின் கணவர் பெருமாள் என்ற ராஜமாணிக்கம், மூர்த்தி, ரமேஷ் ஆகியோர் சண்டையை தடுத்த போது அவர்களையும் எதிரிகள் அனைவரும் கையாலும் உருட்டுக்கட்டையால் மாறி மாறி அடித்து ரமேசிற்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் வாதியின் கணவர் வெளியே ஓடி சத்தம் போட்டதும் அருகில் இருந்தவர்கள் ஓடி வருவதைப்பார்த்ததும் எதிரிகள் அனைவரும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம்னு உருட்டுக்கட்டையை காட்டி



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:38 +0530

மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர் என்றும் எனவே 1, 2, 3 எதிரிகளின் செய்கையானது இ.த.ச.147, 148, 452, 294 (b) (4 counts), 324 (4 counts), 506 (II) மற்றும் 4 of TNPHW ACT–ஆகிய பிரிவுகளின் கீழும், 4, 5 எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 147, 148, 452, 294 (b) (4 counts), 323 (1 count), 324 (3 counts), 506 (ii) மற்றும் 4 of TNPHW ACT ஆகிய பிரிவுகளின் கீழும், 6 ஆம் எதிரியின் செய்கையானது இ.த.ச. 147, 148, 452, 294 (b) (4 counts) , 323 (4 counts), 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரும்பாவூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1, 2, 3, 5 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>

3) 1, 2, 3, 5 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1, 2, 3 எதிரிகள் மீது இ.த.ச. 148, 452, 294(b)(4 counts) ,324(4 counts), 506(ii) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழும், 5 ஆம் எதிரி மீது இ.த.ச. 148, 452, 294(b)(4 counts) ,323, 324(3 counts), 506(ii) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1, 2, 3, 5 எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :–</u>

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 மலர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்றும் வழக்கு சம்மந்தமாக மேல்நடவடிக்கை வலியுறுத்தவில்லை என்றும் தான் பெரம்பலூர் அரசு

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:45 +0530

மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் தன்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றும் அதில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து தன்னுடையது தான் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 அங்கமுத்து தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் நேரடியாக தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் கூறி அரசுத் தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சிகளாகிவிட்டார்.

7. அ.சா.3 அம்பேத்கார், தலைமை காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 02.12.2018 ம் தேதி அன்று அரும்பாவூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக செல்வராஜ் என்பவர் பணியிலிருந்தார் என்றும் அவர் தற்போது பணிஓய்வு பெற்று வெளியூரில் வசித்து வருவதாலும் தரப்பினர் தங்களுக்குள் சமாதானம் ஆகிவிட்டதாலும் இவ்வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபருக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 02.12.2018 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்தபோது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்த வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று அ.சா.1 யை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து அதனை பரிசீலனை செய்து அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண் 238/2018 இதச பிரிவுகள் 147,148,341, 294(b), 323, 324 r/w 4 of TNPHW Act ன்படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் பின்னர் உதவி ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மூர்த்தி, மகேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து அ.சா.ஆ.4 பார்வை மகஜர், அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் சாட்சிகள் மலர், பெருமாள், ரமேஷ், அங்கமுத்து, சின்னசாமி, மூர்த்தி, மகேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் எதிரிகள் பாதியான், பக்கான் ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும் மற்ற எதிரிகள் பெரம்பலூர் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும் அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அஸ்வின் என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.6, அ.சா.ஆ.7 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுகள் இரண்டு பெறப்பட்டது என்றும் பின்னர் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:51 +0530

வகையில் எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 147,148,341, 294(b), 323, 324, 452 r/w 4 of TNPHW Act ன்படி அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றும் எதிரியின் செய்கையானது மேற்படி பிரிவின் கீழ் கடந்த 20.10.2019 ம் தேதி அன்று எதிரிகளின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

**<u>குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்</u>**

8. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2, 3, 5 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1, 2, 3, 5 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2, 3, 5 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு வாதம்</u>**

9. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2, 3, 5 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2, 3, 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**<u>எதிரிகள் தரப்பு வாதம்</u>**

10. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2, 3, 5 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர், கண்ணுற்ற சாட்சி என அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டார்கள் என்றும், 1, 2, 3, 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2, 3, 5 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

11. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2, 3, 5 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:01:56 +0530

**தீர்வு**

12. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 30.11.2018 ம் தேதி மதியம் சுமார் 3.00 மணியளவில் உடும்பியத்தில் உள்ள வாதியின் வீட்டில் வாதி இருந்தபோது எதிரிகள் அனைவரும் வாதியின் வீட்டிற்குள் குற்றமுறு எண்ணத்துடன் அத்துமீறி நுழைந்து எங்கடி உன் புருசனும் மூர்த்தியும் என்று கேட்டுள்ளார்கள் என்றும் வாதி தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே தேவிடியா உன் புருசன் எங்கடி என்று அசிங்கமாகத்திட்டிக்கொண்டே 1, 2, 3, எதிரிகள் கையில் வைத்திருந்த உருட்டுக்கட்டையால் வாதியை அடித்தும் 4, 5 எதிரிகள் வாதியின் தலைமுடியை பிடித்து இழுத்து கைகளால் உடம்பிலும் முகத்திலும் அடித்தும், 6 ம் எதிரி எப்படி தேவிடியா முருகேசன் மேல உன் புருசன் கேஸ் கொடுப்பான் என்று கேட்டு கையால் வாதியின் கன்னத்திலும் முதுகிலும் அடித்தும் வாதிக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள். அப்போது வீட்டிற்கு வந்த வாதியின் கணவர் பெருமாள் என்ற ராஜமாணிக்கம், மூர்த்தி, ரமேஷ் ஆகியோர் சண்டையை தடுத்த போது அவர்களையும் எதிரிகள் அனைவரும் கையாலும் உருட்டுக்கட்டையால் மாறி மாறி அடித்து ரமேசிற்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் வாதியின் கணவர் வெளியே ஓடி சத்தம் போட்டதும் அருகில் இருந்தவர்கள் ஓடி வருவதைப்பார்த்ததும் எதிரிகள் அனைவரும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம்னு உருட்டுக்கட்டையை காட்டி மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர் என்றும் எனவே 1, 2, 3 எதிரிகளின் செய்கையானது இ.த.ச.147, 148, 452, 294 (b) (4 counts), 324 (4 counts), 506 (II) மற்றும் 4 of TNPHW ACT–ஆகிய பிரிவுகளின் கீழும், 4, 5 எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 147, 148, 452, 294 (b) (4 counts), 323 (1 count), 324 (3 counts), 506 (ii) மற்றும் 4 of TNPHW ACT ஆகிய பிரிவுகளின் கீழும், 6 ஆம் எதிரியின் செய்கையானது இ.த.ச. 147, 148, 452, 294 (b) (4 counts) , 323 (4 counts), 506 (ii) ஆகிய பிரிவுகளின் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2, 3, 5 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின்

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:02 +0530

அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 148–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

13. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 5 எதிரிகள் 4, 6 எதிரிகளுடன் சேர்ந்து புகார்தாரருக்கு எதிராக கலகம் விளைவிக்கும் நோக்கத்தோடு சட்டவிரோதமாக கூடியிருந்ததாக 1, 2, 3, 5 எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 148–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, முன்னிடப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் யாரும் 1, 2, 3, 5 எதிரிகள் புகார்தாரருக்கு எதிராக கலகம் விளைவிக்கும் நோக்கத்தோடு சட்டவிரோதமாக கூடியிருந்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 148–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 452 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

14. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 5 எதிரிகள் புகார்தாரரின் வீட்டிற்குள் குற்றமுறு எண்ணத்துடன் அத்துமீறி நுழைந்ததாக 1, 2, 3, 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 452–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 452–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 1, 2, 3, 5 எதிரிகள் அ.சா.1 ன் வீட்டிற்குள் குற்றமுறு எண்ணத்துடன் அத்துமீறி நுழைந்ததாக சாட்சியம் எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 452–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

15. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 5 எதிரிகள் மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 யும், சாட்சிகளையும் ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:09 +0530

செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் புகார்தாரரான அ.சா.1–யும், சாட்சிகளையும் எதிரிகள் பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

16. இந்த வழக்கில் அரசு தரப்பில் 5 ஆம் எதிரி அ.சா.1 ஐ கைகளால் உடம்பிலும், முகத்திலும் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 5 ஆம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ஐ 5 ஆம் எதிரி தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 5 ஆம் எதிரி மீதான இ.த.ச பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 324 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

17. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1, 2, 3, 5 எதிரிகள் புகார்தாரரான அ.சா.1 யும், சாட்சிகளையும் உருட்டுக்கட்டையால் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1, 2, 3, 5 எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 4, 6 எதிரிகள் புகார்தாரரான அ.சா.1 மற்றும் சாட்சிகளையும் உருட்டுக்கட்டையால் அடித்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:14 +0530

**இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 506(2) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த பரிசீலனையும் தீர்வும் :**

18. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 1, 2, 3, 5 எதிரிகள் புகார்தாரரின் கணவரை பார்த்து உருட்டுக்கட்டையை காட்டி உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக 1, 2, 3, 5 எதிரிகள் மீது இ.த.ச.506(2) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1, அ.சா.2 ஆகிய சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் புகார்தாரரின் கணவரை உருட்டுக்கட்டையை காட்டி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 506(2)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும்:**

19. 1, 2, 3, 5 எதிரிகள் அ.சா.1 ஐ பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவருக்கெதிராக குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் 1, 2, 3, 5 எதிரிகள் அ.சா.1–க்கு எதிராக அவரை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1, 2, 3, 5 எதிரிகள் மீதான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1, 2, 3, 5 எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. முடிவில், 1, 2, 3 எதிரிகள் மீதான இ.த.ச. 148, 452, 294(b)(4 counts) ,324(4 counts), 506(ii) மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 5 ஆம் எதிரி மீதான இ.த.ச. 148, 452, 294(b)(4 counts) ,323, 324(3 counts), 506(ii) மற்றும் தமிழ்நாடு பெண்கள்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:20 +0530

வன்கொடுமைத் தடுப்புச்சட்டம் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும் அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2, 3, 5 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2, 3, 5 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 16.03.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:27 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :-**

1. அ.சா.1 – மலர்
2. அ.சா.2 – அங்கமுத்து
3. அ.சா.3 – அம்பேத்கார்(தலைமை காவலர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :-**

1. அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. அ.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – பார்வைமகஜர்
5. அ.சா.ஆ.5 – மாதிரிவரைபடம்
6. அ.சா.ஆ.6 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று(மலர்)
7. அ.சா.ஆ.7 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று(அங்கமுத்து)
8. அ.சா.ஆ.8 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :-**

இல்லை.

**<u>IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–</u>** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:32 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Arumbavur PS, Cr.No.238/2018, U/S.148, 452, 294(b), 323, 324, 506(ii) IPC and Sec 4 of TNPHW Act | Name | A1-Pathiyan@Murugesan | Occurrence | 30.11.2018 | - |
| | | Father's Name | Angamuthu | Complaint | 02.12.2018 | |
| | | Occupation | Labourar | Apprehension | 04.12.2018 | |
| | | Residence | Ambethkar street, Udumbiyam, Veppanthattai Taluk, Perambalur (DT) | Release on bail | 15.03.2023 | |
| | | Age | 42/2018 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 11.03.2026 | |
| | | | | Closure of Trial | 11.03.2026 | |
| | | | | Sentence or Order | 16.03.2026 | |
| 2. | Arumbavur PS, Cr.No.238/2018, U/S. 148, 452, 294(b), 323, 324, 506(ii)) IPC and Sec 4 of TNPHW Act | Name | A2 - Bakkan@Murugesan | Occurrence | 30.11.2018 | |
| | | Father's Name | Angamuthu | Complaint | 02.12.2018 | |
| | | Occupation | Labourar | Apprehension | 02.12.2018 | |
| | | Residence | Ambethkar street, Udumbiyam, Veppanthattai Taluk, Perambalur (DT) | Release on bail | 06.12.2018 | |
| | | Age | 42/2018 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 11.03.2026 | |
| | | | | Closure of Trial | 11.03.2026 | |
| | | | | Sentence or Order | 16.03.2026 | |
| 3. | Arumbavur PS, Cr.No.238/2018, U/S. 148, 452, 294(b), 323, 324, 506(ii)) IPC and Sec 4 of TNPHW Act | Name | A3-Murugesan | Occurrence | 30.11.2018 | |
| | | Father's Name | Thopulan | Complaint | 02.12.2018 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Ambethkar street, Udumbiyam, Veppanthattai Taluk, Perambalur (DT) | Release on bail | 14.12.2018 (AB) | |
| | | Age | 43/2018 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 11.03.2026 | |
| | | | | Closure of Trial | 11.03.2026 | |
| | | | | Sentence or Order | 16.03.2026 | |
| 4. | Arumbavur PS, Cr.No.238/2018, U/S. 148, 452, 294(b), 323, 324, 506(ii)) IPC and Sec 4 of TNPHW Act | Name | A5- Mahendiran | Occurrence | 30.11.2018 | |



RESHMA

Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:39 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Father's Name | Periyasamy | Complaint | 02.12.2018 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | Ambethkar street, Thaluthalai, Veppanthattai Taluk, Perambalur (DT) | Release on bail | 26.12.2018 (AB) | |
| | | Age | 32/2018 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 11.03.2026 | |
| | | | | Closure of Trial | 11.03.2026 | |
| | | | | Sentence or Order | 16.03.2026 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:47 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 173 OF 2020

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

Complainant Malar

Accused A1.Pathiyan@Murugesan S/o.Angamuthu

A2.Bakkan S/o.Angamuthu

A3.Murugesan, S/o.Thoppulan

A5.Mahendiran S/o.Periyasamy

Offence U/S. 148, 452, 294(b), 323, 324, 506(ii)) IPC and Sec 4 of TNPHW Act

Findings Acquitted

Sentence --

| Serial Number | Description of the Accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Pathiyan@Murugesan | Angamuthu | Male | Labourar | Udumbiyam | 42/2018 |
| 2. | Bakkan | Angamuthu | Male | Labourar | Udumbiyam | 42/2018 |
| 3. | Murugesan | Thoppulan | Male | Labourar | Udumbiyam | 43/2018 |
| 4. | Mahendiran | Periyasamy | Male | Labourar | Thaluthalai | 32/2018 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commenceme nt of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 30.11.2018 | 02.12.2018 | 04.12.2018 | 15.03.2023 | 11.03.2026 | 11.03.2026 | 16.03.2026 | - |
| 30.11.2018 | 02.12.2018 | 02.12.2018 | 06.12.2018 | 11.03.2026 | 11.03.2026 | 16.03.2026 | - |
| 30.11.2018 | 02.12.2018 | 14.12.2018 | 14.12.2018(AB) | 11.03.2026 | 11.03.2026 | 16.03.2026 | - |
| 30.11.2018 | 02.12.2018 | 26.12.2018 | 26.12.2018(AB) | 11.03.2026 | 11.03.2026 | 16.03.2026 | - |

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.16 19:02:54 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.